# அடுத்த ஆண்டுவரை பாடப் புத்தகங்களில்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 13
இதழ் 28
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 25 முஹறம் 11 செவ்வாய்க்கிழமை (9-3-71)

# மாற்றமிராது!

கோட்டை, திங்கள் பாடசாலைகளில் தற்போது பாவனையில் இருந்து வரும் பாடப்புத்தகங்கள் அடுத்த 72-ம் ஆண்டுவரை பாவிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. கல்வி வெளியீடுகளின் உயர்சபை இவ்வாறு சிபாரிசுசெய்துள்ளது.

இந்நிலையில் கல்வி வெளியீடுகளின் உயர் சபை பாடப்புத்தகங்கள் பற்றிய அபிப்பிராயங்களையும் சேகரிக்கவிருப்பதாக கல்விஅமைச்சைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

பாடபுத்தகங்கள் சம்பந்தமாக எடுக்கப்படும் எந்தத் தீர்மானமும் அடுத்தஆண்டு முடிவிலேயே செயற்படுத்தப்படும் என சொன்னார்.

நடைமுறையிலிருந்து வரும் எல்லாபாடபுத்தகங்களும் அடுத்தவருடம் வரை விநியோகிக்கத்தக்க அளவு கையிருப்பிலுள்ளதாம்.

### மக்கள் வங்கி ஆனது

மூதூர், திங்கள்

திருமலை மாவட்ட கூட்டுறவு வங்கியின் மூதூர் கிளையை மக்கள் வங்கி தனது கிளைகளில் ஒன்றாகச் சுவீகரித்துக் கொண்டுள்ளது. கடந்த மாசி மாதம் முதற் கொண்டே இது அமுலுக்கு வந்துள்ளது.

# சகல தூதரகங்களுக்கும பலத்த பொலிஸ் பாதுகாப்பு

## அமெரிக்க தூதரக சம்பவம்பற்றி அரசு மன்னிப்பு கோருகிறது

கோட்டை, திங்கள் இலங்கையிலுள்ள சகல வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதென்று அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக அறியப்படுகிறது.

சென்ற சனிக்கிழமை முற்பகல் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் மீது இளைஞர் கோஷ்டியொன்று நடத்திய திடீர்த்தாக்குதல் சம்பந்தமாக அமெரிக்கத் தூதரகத்திடம் இலங்கைஅரசாங்கம் மன்னிப்புக் கோரியுள்ளது.

அமெரிக்கத் தூதரகம் தாக்கப்பட்டது சம்பந்தமாக மந்திரிசபை ஆலோசனை செய்ததாகவும் இதைத் தொடர்ந்து இங்குள்ள சகல தூதரகங்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்புகள் பற்றி முடிவுசெய்யப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

கச்சதீவுப் பிரயாணிகள்

## உணவு தண்ணீர் மட்டுமே கொண்டு செல்லலாம்

யாழ்ப்பாணம் செவ் இம்முறை கச்சதீவுக்குச் செல்லும் யாத்திரிகர்கள் குடிதண்ணீர் உணவுப் பொருட்களை மட்டுமே எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிகிறது.

மேற்படி பொருட்கள் தவிர மற்றைய பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். குறிப்பிட்ட துறைகளிலிருந்தே யாத்திரீகர்கள் பிரயாணம்செய்ய வேண்டுமென்றும் கேட்கப்படுவார்கள் என்றும் தெரிகிறது.

## கனடாப் பிரதமருக்கு ஸ்ரீமாவோ வாழ்த்து

கோட்டை, திங்கள் இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கனடாப் பிரதமர் எலியட் ட்ரூடோவுக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள தந்திச் செய்தியொன்றில் தமது திருமண வாழ்த்தை தெரிவித்துள்ளார்.

கனடா பிரதமர் திரு. ட்ரூடோவுக்கும் செல்வி மார்க்கரெட் சின்கிலியருக்கும் விவாகம் நடைபெற்றது. தம்பதிகள் சந்தோஷமாக வாழவாழ்த்துவதாக பிரதமர் சிறிமாவோ தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## சுங்கக்கட்டிடத்தில் இலங்கை வங்கி

கொழும்பு, திங்கள் ஊர்காவற்றுறையில் நிறுவப்படவிருக்கும் இலங்கை வங்கிக்கிளை ஊர்காவற்றுறை சுங்கக் காரியாலயக் கட்டிடமொன்றில் அமைக்கப்படும் என்று நிதி அமைச்சு வட்டாரம் தெரிவித்தது.

இம்மாதம் 16-ம் திகதி நிதி அமைச்சர் டாக்டர் என். எம் பெரேரா இந்தக் கிளையைத் திறந்து வைக்க விருப்பது தெரிந்ததே. (சி. பி. ஏ)

## இ. போ. ச. டிப்போக்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

கொழும்பு, திங்கள்

நாடு பூராவுமுள்ள இ. போ. ச. டிப்போக்களிலும் காரியாலயங்களிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இ. போ. சபைக்குச் சொந்தமான உடைமைகளை நாசப்படுத்தியும் திருட்டுச்சம்பவங்கள் நடைபெற்றும் வருவதைத்தொடர்ந்து இவ்வித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக இ. போ. ச. உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மிதிபலகைப் பிரயாணம் தடைசெய்யப் பட்டநாளிலிருந்து பலபஸ்கள் அடிக்கடி பழுதடைவதாகவும் பஸ்ஸிலுள்ள எரிபொருள் தாங்கிகளுக்குள் பஞ்சு போன்ற பொருட்களைப் புகுத்தி பஸ்களை திடீர் திடீரென பழுதடையச் செய்வதாகவும் இ-போ-ச தலைமைக்காரியாலயத்துக்கு தகவல் கிடைத்துள்ளது இ-போ-ச ஊழியர்களே இவ்வித நாசவேலையில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்தே இவ்வித பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மிதிபலகைப் பிரயாணம் தடைசெய்யப்பட்டதிலிருந்து 10,000 ரூபா மேலதிக வருமானம் கிடைப்பதாகவும் அதேவேளையில் பல பஸ்கள் பழுதடைவதாகவும் கூறப்பட்டது பஸ்களை திருத்தும் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### துப்பாக்கி முனையில் கொள்ளை

ஆயுதந் தாங்கிய கோஷ்டி ஒன்று வெலிமடை இ-போ-சபையில் 8000 ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

துப்பாக்கி முனையில் இ. போ. ச. காசாளரிடமிருந்து இரும்புப்பெட்டியின் திறப்பைப்பெற்று இக்கொள்ளை நடை பெற்றுள்ளதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

வெலிமடை பொலிஸ் நிலையப்பொறுப் பதிகாரி திரு. பேர்ஸி விஜயநாயக்கா

(6ம் பக்கம் பார்க்க)

தூதரக தாக்குதல்:

## 7 பேரும் ரிமாண்டில்

கோட்டை, திங்கள் அமெரிக்க தூதரக தாக்குதல் சம்பவம் சம்பந்தமாக ஏழு பேரும் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 14-ம் திகதி வரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களுக்கான அடையாள அணி வகுப்பும் அன்றையதினம் இடம்பெறும்.

இச் சம்பவத்தின்போது கத்திக்குத்துக்கு இலக்கான பொலிஸ் இன்ஸ்பெக்டர் கருணாரத்தினாவின் நிலைமையில் எதுவித மாற்றமுமில்லையென்று நிலைமை படுமோசமாக இருப்பதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரம் நேற்றுத் தெரிவித்தது.

1-வது குற்றச்சாட்டில் எதிரி சுற்றவாளி

# 3 வருட நன்னடத்தை பிணையில் செல்ல அனுமதி

## வவுனியா கொலை முயற்சி வழக்கு தீர்ப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய் வவுனியா கொலைமுயற்சி வழக்கில் எதிரியான முனியாண்டி நடராசாவை 1000 ரூபா பொறுப்பில் 3 வருட நன்நடத்தைபிணையில்செல்ல நீதியரசர் அனுமதித்தார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஜி. ஜி. வீரமந்திரி முன்னிலையில் கடந்த 3 தினங்களாக விசாரணை செய்யப்பட்டு நேற்றுதீர்ப்பு வழங்கப்பட்டது.

நேற்றுக்காலை எதிரிசார்பில் ஆஜரான அட்வகேட் ஆர். ஈ தம்பிரத்தினம் முடிக்குரிய வழக்கறிஞர் சந்திரசேகரா ஆகியோர் தொகுப்புரை நிகழ்த்திய பின் நீதியரசர் உரை நிகழ்த்தினர்.

நேற்று பிற்பகல் 1-30 மணியளவில் ஜுரிசபையினர் தனிமையில் கூடி மந்திராலோசனை செய்த பின் தங்கள் திர்ப்பை தெரிவித்தனர்.

கொலைமுயற்சிகுற்றச்சாட்டில் எதிரி சுற்றவாளியென்றும், தற்கொலை முயற்சி குற்றச்சாட்டில் எதிரி குற்றவாளியென்றும், ஜுரிசபையினர் ஏகமனதாக தெரிவித்தனர்.

எதிரி சார்பில் ஆஜரான அட்வகேட் தம்பிரத்தினம், எதிரிக்கு 25 வயதென்றும், 13 மாதகாலம் விளக்கமறியலில் இருந்திருப்பதாகவும் நீதியரசரின் கவனத்

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உலகிடை சிங்கத்தைப் போல் அஞ்சாநெஞ்சுடனும் ஆண்மையுடனும் திகழ்; பொறுமையிலும் சேவையிலும் ஒட்டகத்தை ஒத்திரு; சாந்தம், பொறை, வள்ளன்மை இக்குணங்களில் பசுவைப்போல் விளங்கு.

— ஸ்ரீ அரவிந்தர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் மாசி மாதம் 25ந் திகதி (9-3-71)


## பாராட்டுகிறோம்!

தலைநகரிலே சில பாதைகளில் பஸ்ஸிலே மிதிபலகையில் பிரயாணம் செய்யாமல் தடுத்துள்ளதால் தினசரி வருமானத்தில் சுமார் பத்தாயிரம் ரூபாய் அதிகரித்துள்ளதாக ஒரு செய்தி தெரிவிக்கின்றது. இது உண்மையாயின் இந்த நடவடிக்கையை எடுத்த இ. போ. ச. அதிபரையும் பூரண ஒத்துழைப்புத் தந்த பொதுமக்களையும் பாராட்ட வேண்டும்.

மிதிபலகையில் பிரயாணம் செய்யாமல் தடுத்ததால் 'பிக்பாக்கெட்' தொல்லையும் குறைந்து, பிரயாணிகள் நிம்மதியாகப் பிரயாணம் செய்ய முடிவதாகக் கூறப்படுகிறது. அதிகமான பஸ்ஸுகளை அப்பாதைகளில் விட்டதால், மக்கள் வீண் தவக்கங்களும் கஷ்டமுமின்றிப் பிரயாணம் செய்யமுடிகிறதாம். சென்ற சில நாட்களில் இதில் வெற்றி கண்டுள்ளதால், இதே முறையை தீவெங்கும் எல்லாப் பாதைகளிலும் கொண்டுவந்தால், பொதுமக்களுக்குமட்டுமன்றி அரசாங்கத்துக்கும் நன்மையாகும்.

இதற்கு அதிகமான பஸ்ஸுகள் தேவைப்படக்கூடும். இந்தியாவிலிருந்து புதிய பஸ்ஸுகளை வாங்க ஒழுங்கு செய்துள்ளது வரவேற்கத் தக்கது. நமக்குத் தேவையான பஸ்ஸுகளை இந்தியா தடையின்றி 'சப்ளை' செய்து உதவுமென்றே நம்புவோம். அத்துடன் நமக்குத் தேவையான பஸ்ஸுகளை இங்கு நாமே கட்டிக்கொள்ள ஏற்பாடு செய்ய முடியுமாயின் மிக நல்லது. சில காரணங்களால் உடன் அதற்கான ஏற்பாடு செய்ய முடியாவிடில் இந்தியாவிலிருந்து தேவையான பஸ்ஸுகளை அதுவரை வாங்கிக்கொள்ளலாம். பிரிட்டனிலிருந்து இரண்டு அடுக்குள்ள பழைய பஸ்ஸுகளை வாங்குவதில் நயமில்லை என்றும், அவை அதிகம் பழுதாகி விடுவதாகவும் தெரிகிறது. மேலும் ஒரு நாட்டில் ஓடிய பஸ்ஸுகளை நம் பொதுமக்களின் பாவனைக்குப் பயன்படுத்துவது நம் பெருமையை உயர்த்தவும் முடியாது. பிரிட்டனிலிருந்து பழைய பஸ்ஸுகளை வாங்குவதைக் கைவிடுவதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளதாம். இது வரவேற்கத்தக்கதாகும்.

இதே சமயம் கொழும்புப் பகுதியில் சென்ற சில நாட்களிலே 80 பஸ்ஸுகள் ஓடமுடியாதபடி நாசவேலை நடந்துள்ளதாயும், இ. போ. ச. ஊழியர்களில் சிலரே இவ்வேலையில் ஈடுபட்டுள்ளதாகவும் ஓர் அதிகாரி தெரிவிக்கிறார். இவ்வித துரோக வேலை செய்பவர்களைக் கண்டுபிடிக்கப் போக்குவரத்துச் சபையார் விசேஷ நடவடிக்கைகள் எடுத்துள்ளனராம். நாட்டுக்கும் பொதுமக்களுக்கும் பெருந் தீங்கு செய்யும் இவ்விதமான காரியங்களைத் தடுப்பதில் அரசாங்கம் மிகவும் கண்டிப்பாக இருக்க வேண்டும். நாசவேலையில் ஈடுபட்டவர்களின் நோக்கம் என்னவென்று தெரியவில்லை. நோக்கம் எதுவாயினும் சரி இக்காரியங்களை முளையிலேயே கிள்ளி எறியாவிடில் அது மிகப் பெரிதாகிப் பரவி, பெரும் விபரீதத்தில் முடியும். பொதுமக்களும் சிறப்பாக எல்லாக்கட்சியினரும், சிப்பந்திகளும் இவ்விஷயத்தில் தேசாபிமானத்துடன் ஒத்துழைக்கவேண்டியது எவ்வளவு அவசியமென்பதை விளக்கத் தேவையில்லை.

## கிழக்குப் பாகிஸ்தானில்

கிழக்குப் பாகிஸ்தானில் பல பகுதிகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கானவர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் வருவதாக ஓர் அரசியல் தலைவர் தெரிவிக்கின்றார். இது பெரிதும் வருந்தத்தக்க நிலையாகும். சில மாதங்களுக்கு முன்புதான் கிழக்குப் பாகிஸ்தானில் கடல் பொங்கி லட்சக்கணக்கானவர்கள் மடிந்தனர். பின்னர் நடைபெற்ற பொதுத் தேர்தலின் பயனாக அங்கு இராணுவ ஆட்சி முடிந்து, ஜனநாயக ஆட்சி ஏற்படுமென்று ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டது ஆனால் பாகிஸ்தானின் இரு பகுதி மக்களின் நம்பிக்கையைப் பெற்ற அரசியல் கட்சி எதுவுமில்லை மேற்குப் பாகிஸ்தானில் பூட்டோவின் மக்கள் கட்சிக்கும், கிழக்குப் பாகிஸ்தானில் முஜிபுர் ரஹ்மானின் அவாமி கட்சிக்கும் தேர்தலில் வெற்றிகிடைத்துள்ளது. இவ்விரு தலைவர்களும் ஒத்துழைத்தால் தான் அங்கு ஜனநாயகம் அமைதியாக வெற்றியாக நடைபெற முடியும்.

துரதிஷ்டவசமாக அந்த ஒத்துழைப்பு ஏற்படவில்லை. ஜனாதிபதி யாஹ்யா கான், புதிய தேசிய சபையைக்கூட்ட ஒரு திகதியை அறிவித்தார். ஆனால் மக்கள் கட்சித் தலைவர் அக்கூட்டத்தை ஒத்திவைக்கவேண்டுமென்றும், இன்றேல் தாமும் தமது கட்சியினரும் அங்கு செல்ல முடியாதென்றும் கூறவே, ஜனாதிபதி அக்கூட்டத்தை ஒத்திவைத்தார் பல கட்சித்தலைவர்களையும் கூட்டி அவர்களிடையேயுள்ள வேற்றுமைகளை நீக்கவும், புதிய அரசியலைத் தயாரிக்கவும் முற்பட்டதாகவும் ஆனால் அதைப் பற்றித் தப்பெண்ணம் கொண்டு அக்கூட்டத்துக்குக் கிழக்குப்பாகிஸ்தான் தலைவர் வர மறுத்தது தமக்கு ஏமாற்றமும் வியப்பும் அளித்ததாகவும் கூறுகிறார் பாகிஸ்தான் தலைவர். தேசிய சபைக் கூட்டத்தை ஒத்திவைக்குமுன் அவர் தமது நோக்கத்தைத் தெளிவாக விளக்கியிருப்பின், மேற்குறித்த தப்பெண்ணம் ஏற்படாமல், நிலைமை மோசமாகாமல் தடுத்திருக்கக்கூடும்.

இது எப்படியாயினும் இம்மாதம் 25-ம் திகதி புதிய தேசிய சபை கூடுமென்று தலைவர் அறிவித்திருக்கிறார். இதற்கிடையே இரு பகுதித் தலைவர்களையும் அவர் கூட்டிப் பேசி, வேற்றுமைகளை நீக்கக்கூடிய முயற்சி எடுத்தால் அது வீண்போக முடியாது. ஜனநாயகத்தின் வெற்றி இரு சாரினரும் விட்டுக்கொடுப்பதில்தான் அடங்கியிருக்குமேயன்றி, பிடிவாதத்தில் அல்ல மேற்கூறிய உயிர்த்தியாகங்கள் மூலம் இப்பாடத்தைத் தலைவர்கள் உணர்ந்தால் இம்மாதம் கூடும் தேசிய சபை வெற்றிகரமாக நடைபெற முடியும்.

## போதும் இந்த வேலை!

கைதடி, திங்கள்

பெற்றோரை விட்டுப்பிரிந்து யாழ்ப்பாணப்பகுதியில் பல வீடுகளிலும் பணியாளராகப் பணிபுரிந்து வந்த 10 வயதுச் சிறுவனுக்கு மீண்டும் பெற்றோருடனேயே வாழும் ஆசைபிறந்தது. சிலாபப்பகுதியைச் சேர்ந்த இச்சிறுவன் இனிமேல் தாம் எந்த வீட்டிலும்பணியாளாக இருக்கவிரும்பவில்லையென்றும் பெற்றோருடனேயே வாழவிரும்புவதாகவும் கிராமசேவகரிடம் சென்று முறையிட்டுள்ளார்.

மட்டுவிலில் ஒரு வீட்டில் வேலைக்காரனாகஇருந்தஇவர் கைதடிக்கிராம சேவகரிடம் சென்று தமது ஆசையைத் தெரிவித்துக் கொண்டார்.

முதலில் யாழ்ப்பாணத்திலும் பின்னர் சிலாபத்திலும் தாம் வீட்டுவேலைக்காரனாக இருந்ததாகவும் இனிமேல் ஒரு நிமிடம்கூட பெற்றோரைப்பிரிந்து எங்குமே இருக்கவிரும்பவில்லையென்றும் கிராம சேவகரிடம் கூறிய பிரஸ்தாப சிறுவன் தாம் சிலாபத்தைச் சேர்ந்தவரென்றும் தமது தந்தையின் பெயர் மெய்யப்பன் என்றும் தாயார் பெயர் குழந்தாயி என்றும் தெரிவித்தார்.

......

## பட்டுப்பூச்சி வளர்ப்பு

கோட்டை, திங்கள்

நாட்டின் சில பகுதிகளில் முசுக்கொட்டைச்செடி வளர்ப்பை ஆரம்பிக்க தோட்டத்தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

உத்தேச பட்டு உற்பத்திக் கைத்தொழிலுக்கு உள்நாட்டிலேயே மூலப்பொருளைக் குறைந்த செலவில் பெற வேண்டும் என்ற நோக்கத்துடனேயே தோட்டத் தொழில் அமைச்சு பட்டுப் பூச்சி வளர்ப்புக்குத் தேவையான முசுக்கட்டைச செடியைப் பெருமளவில் பயிர் செய்ய உத்தேசித்துள்ளது.

## கினிதுமயாத்திரை

பண்டத்தரிப்பு, திங்கள்

இலங்கையின் கஸ்வாரி எனப்புகழ் பெறும் கினிதுமவிற்கு கொழும்பு மேற்றிராசனத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மக்கள் யாத்திரை மேற்கொள்ள விருக்கின்றனர். தவக்காலத்தை முன்னிட்டு இந்த யாத்திரையை மேற்கொள்ளவிருக்கின்றனர். அங்கு மும்மொழிகளிலும் வழிபாடுகள் நடைபெறும் இம்மாதம் 17,18-ம் திகதிகளில் யாத்திரைக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## வவனியாவில் இ: தொ. கா. கிளை

நெடுங்கேணி, திங்கள்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள தொழிற்சங்கமான, இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் கிளை வவனியா மாவட்டத்தில் செயல்பட ஆரம்பித்துள்ளது,

## ஜெயராஜ் எழுதுவது..

பழம் பெரும் தேசபக்தரான பேரின்பநாயகம் அவர்கள் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் சார்பாக மகாத்மா காந்தியை 1927-ம் வருடம் இந்தியா சென்று சந்தித்து இலங்கைக்கு வருமாறு அழைத்ததின்மீதே அவர் இங்கு வந்ததாயும், அமரரான தம்பர் மாஸ்டர் அல்லவென்றும் ஓர் அன்பர் தெரிவிக்கின்றார்.

இந்தத் தவறுக்காக வருந்தும் அதே சமயத்தில், பெரியார் பேரின்பநாயகம் அவர்கள் வாலிபர் காங்கிரஸ் நடவடிக்கைபற்றியும், இந்தியா சென்று மகாத்மாவை இங்கு அழைத்து வந்ததுபற்றியும் பல ருசிகரமான விவரங்களையும் எழுத வேண்டுகிறேன். அது பலருக்கும் பயன்படுவதாக இருக்கும் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் தேசிய விடுதலைக்காக நடத்திய இயக்கம் எழுத்து அரசியல் சரித்திரத்தில் பதியத்தக்கது. அந்தக் காங்கிரஸில் தம்பர் மாஸ்டரும் சேர்ந்து பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

குறுகிய வகுப்புவாதம் சிறிதுமின்றி தேசிய விடுதலைக்காக யாழ்ப்பாண வாலிபர்கள் எவ்விதம் தொண்டாற்றினர் என்பது இப்போதுள்ள சந்ததியினரில் பலருக்குத் தெரியாது. அவ்விவரங்களைத் தமிழில் மட்டுமன்றி சிங்களத்திலும் நூலாக வெளியிடவேண்டும். தமிழரின் தேசாபிமானத்தையும், தியாகத்தையும் அதனால் பலரும் அறிய முடிவதாக இருக்கும்.

0 0 0

அமரரான சுவாமி விபுலானந்தர் அவதரித்த காரைதீவுக்கு(அது தீவல்ல. செழிப்பான அழகான நகரமேயாகும்) ச் சென்று அந்தப் புனித இடத்தைத் தரிசித்தேன். அங்குள்ள நூலகத்தின் முன்பாக அவரது உருவச்சிலையை வைத்து அம்மக்கள் நன்றியுடன் போற்றுகின்றனர்கள். அவர் கட்டி நடத்திய பல கல்வி ஸ்தாபனங்களையும், அனாதை விடுதிகளையும் பார்த்தேன். கிழக்கு மாகாணத்தின் மறுமலர்ச்சிக்கு சுவாமி அவர்களே பெரிதும் காரணமாவார்கள். கல்வி ஸ்தாபனங்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டது ஒரு விதத்தில் நல்லதுதான் என்று பட்டது. திக்கற்ற குழந்தைகளுக்கு உதவி, அவர்களை மேலான மக்களாக உருவாக்குவதில், ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் முழுக் கவனத்தையும் இதனால் செலுத்த முடிகிறது

அழகான அமைதியான ஓர் இடத்துக்குச் சென்று நிம்மதியாகச் சில நாட்களைக் கழிக்க நீங்கள் விரும்புகிறீர்களா? மட்டக்களப்புக்குச் செல்லுங்கள். அது மிக நல்ல மாறுதலாக இருக்குமென்று உறுதியாகக் கூறுகிறேன். ஐரோப்பாவிலே இம்மாதிரியான கடல் வாவிகளும் இயற்கை வளம் கொஞ்சும் இடங்களும் இருப்பின், அதைப்பற்றி பிரமாதமாக விளம்பரம் செய்து நவீன ஓட்டல்கள் முதலியன கட்டி, அதை ஒரு பெரிய 'டூரிஸ்ட்' சென்டர்' ஆக்கியிருப்பார்கள்.

இலங்கை அரசாங்கம் கொழும்பையும் மலைநாட்டையும்தான் வெளிநாட்டுப் யாத்திரிகர்களுக்குக் காட்டுகிறது அங்குதான் பெரிய பெரிய ஹோட்டல்களைக் கட்டுகின்றார்கள். கிழக்கையும் வடக்கையும் ஒதுக்கி விட்டது வருந்தத்தக்கதாகும். இயற்கை அன்னை அப்பகுதிகளையும் தனி அழகு செய்கின்றார். ஆகவே உலக யாத்திரிகர்கள் அங்கும்வந்து பார்க்க அப்பகுதி எம். பி. மார்கள் கூடியமுயற்சிகளைச் செய்யவேண்டும். அழுகிற பிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும்

உலக யாத்திரிகர்கள் அதிகம் வருகை தருவதால் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் முதலிய பகுதிகளின் புகழ் உலகில் பரவுவதுடன் அங்குள்ள மக்களின் கைத்தொழில்களுக்கு ஆதரவு கிடைப்பதாயும் சுபீட்சம் ஓங்குவதாகவுமிருக்கும்.

0 0 0

அங்கு பல அன்பர்களுடன் பேசியதில் அவர்களுக்கு யாழ்ப்பாணத்தவரைப்பற்றி சில குறைகள் இருப்பதை உணர்ந்தேன். மட்டக்களப்பு மக்கள் பல துறைகளிலும் முன்னேறி வருகின்றார்கள். தங்கள்காரியங்களைத் தாங்களே பார்த்துக்கொள்ளமுடியுமென்று நம்புகின்றனர். பாலில் சீனி கலந்ததுபோல் அங்கு செல்லும் மக்கள் அன்பாக, உதவியாக அவர்களை மதித்து வாழவேண்டும். அப்படியும் பலர் இருப்பதைக்கண்டேன் அன்புத்தொண்டு மூலம்தான் அவர்களது அபிமானத்தையும் இழந்த நம்பிக்கையையும் பெறக்கூடியதாக இருக்கும். இரு சாரினருக்கும் விவாகங்கள் நடந்து உறவுகள்பலப்பட்டு வருவதும் வரவேற்கத்தக்கது.

மட்டக்களப்பிலிருந்து காரைதீவுவரை சுமார் 25 மைல் தூரம் செல்லுகையில் வழியே முஸ்லிம் மக்கள் அதிகம் வாழும் கிராமங்களும் மற்ற தமிழர் வாழும் கிராமங்களும் அடுத்து உள்ளன. வர்த்தகம், தொழில் இவற்றில் இஸ்லாமிய அன்பர்கள் அதிக ஊக்கத்துடன் ஈடு படுவதால் அவர்களது கிராமங்கள் பொருளாதாரம் அதிகம் முன்னேறியுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது மேலும் தெய்வநம்பிக்கைகொண்டு கட்டுப்பாடாகப் பிரார்த்தனை செய்வதால் அவர்கள் அதிக மனத்தைரியத்துடன் வாழமுடிகிறது. இருசமூகத்தவருக்கும் சில இடங்களில் அவ்வளவு நல்லுறவு இல்லை என்றும் சுயநல அரசியல் தலைவர்களே இதற்குக் காரணமென்றும் தேர்தல் காரணத்தால்தான் வகுப்புவாத உணர்ச்சிகள் தலைதூக்கியதாகவும் தெரிகிறது. தெய்வமே இந்தத் தேர்தல் கலாட்டாவிலிருந்து மக்களையும் அமைதியையும் காப்பாற்றவேண்டும்.

குழந்தைகள்மூலம் அங்கு பலகலைகளும்வளர்ந்தோங்கி வருவதைக் கண்டேன். மாணவிகள் அன்னை சாரதாதேவியின் வாழ்க்கையைப் பற்றி வில்லுப்பாட்டின் மூலம் கேள்விபதிலாக இசை நிகழ்ச்சி நடத்தியது என் மனதைப் பெரிதும் கவர்ந்தது. இசையிலும் அவர்கள் பெரிதும் முன்னேறி வருகிறார்கள். விருந்தோம்பலில் அவர்களது அன்பை மறக்க முடியாது. கட்டித்தயிரும், பாலும் தேனும் ருசியான காய்கறிகளுமெல்லாவற்றையும்விட அன்பும் பண்பும் மிக்க அம்மக்களை விட்டுவர மனமே இல்லையே. மட்டக்களப்பு மக்கள் வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஒத்துழையாமை, வரிகொடா இயக்கம் தொடங்குவோம்"

## முஜிபுர் ரஹ்மான் எச்சரிக்கை

## இராணுவ சட்டத்தை எதிர்த்து

### லண்டனில் பாக். மாணவர் ஆர்ப்பாட்டம்

டாக்கா, மார்ச் 8

**தனது நாலு அம்சக் கோரிக்கையை ஜனாதிபதி யாஹ்யாகான ஒத்துக் கொள்ளாவிட்டால் இன்றிலிருந்து கிழக்குப் பாகிஸ்தானில் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பிக்கப் போவதாக அவாமி லீக்கின் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் டாக்காவில் நடந்த கூட்டத்தில் தெரிவித்தார்.**

கிழக்குப் பாகிஸ்தானில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இராணுவச் சட்டத்தை நீக்கி, அங்குள்ள துருப்புக்களை வாபஸ் பெறுவதோடு, இது வரையும் நடந்த இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விசாரணை நடத்தப்பட வேண்டும். கடந்த டிசம்பர் மாதம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என்ற தனது நாலம்சக் கோரிக்கையை ஜனாதிபதி யாஹ்யாகான் ஏற்றுக்கொள்ளாவிட்டால் இன்றயிலிருந்து ஒத்துழையாமை, வரிகொடாமை ஆகிய இயக்கங்களை கிழக்குப் பாகிஸ்தான் முழுவதும் நடக்கப்போவதாக அவாமி லீக்கின் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் டாக்காவில் நடைபெற்ற பிரமாண்டமான கூட்டத்தில் எச்சரிக்கை விடுத்தார்.

இன்றைய பாகிஸ்தான் நிலைமை பற்றி விளக்கிய அவர், கிழக்கு பாகிஸ்தான் மக்கள் தங்கள் இறுதி லட்சியத்தை அடைய எத்தியாகங்களையும் செய்யத் தயாராக இருக்க வேண்டுமென்றார். நீதி மன்றங்கள் கல்லூரிகள் பாடசாலைகள் கடைகள் யாவும் மூடப்பட்டிருக்க வேண்டும் வங்கிகள் 2 மணி நேரம் வேலை செய்யலாம், தகவல் சாதனங்கள் இயங்க வேண்டும் என அவர் மக்களிடம் எடுத்துச் சொன்னார். வரிகள், இறைவரிகள் ஆகியவற்றைக் கொடுக்க வேண்டாம் என மக்களை அவர் கேட்டுக் கொண்டார்.

அக் கூட்டத்தில் 23 நிமிட நேரம் ரஹ்மான் பேசினார் இராணுவ வீரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தால் ஒவ்வொரு வீடுகளிலும் பாதுகாப்பு குழிகளை அமைத்துக் கொள்ளுங்கள் என அவர் மக்களுக்கு அறிவுறுத்தினார்.

### கான்சலகம் மீது தாக்குதல்

டாக்காவிலுள்ள பிரிட்டிஸ் கான்சலகம்மீது இளைஞர் கோஷ்டி ஒன்று புகுந்து அங்குள்ள பொருட்களைச் சேதமாக்கியது கண்ணாடிகளை உடைத்தனர். கான்சலகத்திலுள்ள நூலகம் பெரும் சேதத்துக்குள்ளாகியது. நூலகத்திலுள்ள புத்தகங்கள் மீது இளைஞர்கள் பெற்ரோல் ஊற்றி கொளுத்திய தில் ஆயிரம் புத்தகங்கள் எரிந்து சாம்பலாயின.

### பத்திரிகையில் வேண்டுகோள்

பாகிஸ்தான் தேசிய சட்டசபையை ஒத்திவைத்ததைத் தொடர்ந்து. இராணுவச் சட்டம் சிறப்பிக்கப் பட்டது. இச் சட்டத்தின் கீழ் பத்திரிகை செய்திகள் தணிக்கை செய்யப்பட்டன. இப் பத்திரிகைச் செய்தித் தணிக்கையை நீக்குமாறு ஜனாதிபதி யாஹ்யாகானை கிழக்குப் பாகிஸ்தான் பத்திரிகையாளர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

கிழக்குப் பாகிஸ்தானில் இராணுவச் சட்டம் பிறப்பித்ததை ஆட்சேபித்தும், இராணுவம் மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை கண்டித்தும் 2 ஆயிரம் பாகிஸ்தானிய மாணவர்கள் லண்டனிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் தூதரக அதிகாரியிடம் ஆட்சேபக் குறிப் பொன்றைக் கையளித்த பொழுது, அவ்வறிக்கையை தாம் ஜனாதிபதி யாஹ்யாகானுக்கு அனுப்பிவைப்பதாகத் அவர் மாணவர்களிடம் தெரிவித்தார்.

**மேற்காசியா**

# போரோய்வை நீடிக்க எதிர்ப்பு மறுப்பு

## 'தாக்குதல் நடத்தும் முதல் நாடாக இஸ்ரேல் இராது'

— இபான்

கெய்ரோ, மார்ச் 8.

மேற்காஸியப் போர் ஓய்வை மேலும் நீடிப்பதற்கு ஐக்கிய அரபுக்குடியரசு மறுத்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் முடிவடைந்த மேற்காசியப் போர் ஓய்வை மேலும் நீடிப்பதற்குத்தாம் தயாராகவில்லை என ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி திரு அன்வார்சதாத் தெரிவித்தார்.

மேலும் அவர் போர் ஓய்வை மேலும்நீடிக்கவிரும்பவில்லைஎன்பதற்காக துப்பாக்கிமுனையில் பிரசினைகளுக்குமுடிவுகாணப்போகிறோம் என்பது அர்த்தமல்ல, சமாதானத்துக்கான வழிமுறைகளை நாம் மேலும் கடைப்பிடிப்போம். எனது நாடு எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டுமோ அதை செய்யும்என்றார்.

சென்ற திங்கட்கிழமை சோவியத்யூனியனில் அந் நாட்டின் தலைவர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தை பற்றிக் குறிப்பிட்டு. மேற்காசியப் பிரச்னையில் ஐ. அ. குடியரசிற்கு சோவியத்யூனியன் அளிக்கும் ஆதரவுக்கும் உதவிக்கும் நாம் நன்றியுடையவர்களாய் இருப்போம். அவர்கள் எமக்கு [illegible] வகையில் உதவிபுரிவார்கள் என்றார்.

### இபான்கருத்து

நேற்றுடன் மேற்காசியப் போர்ஓய்வின் காலக்கெடு முடிவடைந்த பொழுதிலும் எமதுநாடுமுதலில்தாக்குதல் நடத்தும் நாடாக இருக்காதென இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் திரு இபான் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது: கடந்த 32 வருடகால இருந்து வருகிறது. இந்தப் பிரச்னை மாக அரபு இஸ்ரேல் பிரச்னைகளுக்கு முடிவுகாணுமல் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களிலிருந்து இஸ்ரேல் விலகுவதென்பது முடியாத காரியம். ஆனாலும் மேற்காசிய சமாதானத் தூதுவர் டாக்டர் ஜாரிங்கின் முயற்சிகளுக்கு இடையூறு செய்ய மாட்டோம் என்றார்.

### சூயஸ் பகுதியில் பதட்டநிலை

சூயஸ்கால்வாய்ப்பகுதியில் [illegible] இடை

## நோயை ஆரம்பத்தில் கண்டுபிடிக்கும் புதியமுறை

### ரஷ்ய விஞ்ஞானியின் சாதனை

மாஸ்கோ, மார்ச் 8

டேவிட் கோல்டுஃபார்ப் என்ற சோவியத் விஞ்ஞானி நீரிழிவு, கலீரல் நோய் போன்ற கொடிய நோய்களையும் சில பரம்பரை நோய்களையும் துவக்கத்திலேயே இனம் காணும் முறையொன்றைக் கண்டு பிடித்துள்ளார் வைத்தியக் கூடங்களில் இதை விரிவாகப் பயன்படுத்த முடியும் என்பதே இதன் சிறப்பாகும்,

நோயாளியின் இரத்தம் அல்லது சிறுநீரிலுள்ள அமினோ அமிலத்தின் அளவை நிர்வகிக்கும் அடிப்படையில் இம்முறை உள்ளது. இந்த அமினோ அமிலத்தின் அளவு ஆரோக்கிய சாலியைவிட நோயாளியிடம் மிக அதிகமாக உள்ளது. நோயின் தன்மையைப் பொறுத்து சம்பந்தப்பட்ட அமினோ அமிலத்தின் அளவு நோயாளியின் உடலில் அதிகரிக்கிறது.

புதிதாகப் பிறந்த குழந்தைகளின் பரம்பரை நோய்களை துவக்கத்திலேயே இனம் காண வேண்டியது அவசிய மாகும். உரிய காலத்தில் அளிக்கப்படும் சிகிச்சையால் பற்பல குழந்தைகளின் மனநோய் மாறுகிறது. மனித இரத்தம் அல்லது சிறுநீரிலுள்ள அமினோ அமிலத்தின் அளவை ரசாயன முறையிலும், பௌதிக முறையிலும். உயிர்-ரசாயன முறையிலும் நிர்ணயிக்க இதற்கு முன்பு பல முயற்சிகள் நடந்துள்ளன. ஆனால் இந்த முறைகளை வெகுஜன ரீதியில் பயன் படுத்த முடியவில்லை.

பேராசிரியர் கோல்டுஃபார்பின் புதிய முறை மாஸ்கோவிலுள்ள பல சிகிச்சைக்கூடங்களில் பரிசோதிக்கப்பட்டது. அது ஆக்க பூர்வமான விளைவுகளை அளித்துள்ளது. இந்த முறையைப் பரவலாகப் பயன்படுத்த சோவியத் சுகாதார அமைச்சகம் தீர்மானித்துள்ளது.

## மேற்கு வங்காளத்திற்கு மேலும்20 ஆயிரம்பொலிசார்

### பாதுகாப்பு ஏற்பாடுகள் ஜரூர்

புதுடில்லி, மார்ச் 8

மேற்கு வங்காளத்தில் நடக்கவிருக்கும் தேர்தலையொட்டித் தற்பொழுது அங்கு பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருக்கும் இராணுவத்தினரைவிட மேலதிகமாக 10 ஆயிரம் பொலிசார் நிறுத்தப்படுவார்கள். இத்தகவலைக் கல்கத்தாவில் பொலிஸ் கமிஷனர் ஆர். கே. குப்தா தெரிவித்தார்.

மேற்கு வங்காளத்தில் தேர்தல் நடைபெறும் பொழுது, எந்தச் சாவடிக்காவது தேர்தல் அதிகாரி வராவிட்டாலும் வாக்களிப்பதை நிறுத்தவேண்டாம் என இந்தியத் தேர்தல் கமிஷனர் சென்வர்மா அறிவித்துள்ளார்.

மேற்கு வங்காளத்தில் தேர்தல் அதிகாரிகளைப் பெறுவது மிகவும் கஷ்டமாக இருப்பதாகவும். இருக்கக்கூடிய திறமையான அதிகாரிகளைப் பயன்படுத்தியே தேர்தலை நடத்தவேண்டியுள்ளதாகவும் தெரிவித்த அவர் எவ்விதமானாலும் வாக்குப்பதிவு நடைபெற வேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்தியத் தேர்தல் முடிந்ததும். லோக்சபாவுக்கான தேர்தலில் நடைபெற்ற அசம்பாவிதங்களை ஆராய உயர் அதிகாரிகளைக் கொண்ட விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும் என சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. கஸ்தூரி தாக்கூர் தேர்தல் கமிஷனரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தத் தேர்தலில் ஒரு வேட்பாளர் செலவுசெய்த பணம் பற்றியும், அரசு உடைமைகளைத் தவறான முறையில் பயன்படுத்தியமை பற்றியும் இக்குழு விசாரணை செய்யவேண்டுமென அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

பெருவிட்டாலும் அப்பகுதியில் பதட்டநிலைமை இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிரியா ஜோர்டான் எல்லையோரப்பகுதிகளில் துருப்புகள் நிறுத்தப் பட்டுள்ளதாகசெய்திகள் தெரிவிக்கின்றன. சிரியாவின் எல்லைகளில் ராக்கெட்டுக்கள் காணப்படுவதாக ஊர்ஜிதமற்ற செய்தி ஒன்று தெரிவித்தது.

## குடிநீர் திட்டம்

பருத்தித்துறை. திங்கள்

அத்துளு குடிநீர்த்திட்ட நீர்விநியோகத்தை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதா அன்றிப் பட்டினசபை எடுத்து நடத்துவதா என்பது பற்றி நெல்லியடிப்பட்டின சபையில் இதுவரை ஒருதிட்டமான முடிவும் எடுக்கப் படாதபடியால் நீர்விநியோகம் தாமதிப்பதாகக் கூறப் படுகிறது.

— —

### புதிய அரசாங்க அதிபர்

மூதூர், திங்கள்

இவ்வருடம் மார்ச் மாதம் முதல் திருமலையின் புதிய அரசாங்க அதிபராக திரு. தெய்வேந்திரா பதவி ஏற்றுள்ளார்.

புதிய உதவி அரசாங்க அதிபராய் ஏறுவூர்ப்பற்று காரியாதிகாரியாக கடமையாற்றும் திரு. எஸ் செல்வரெத்தினம் பதவி ஏற்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்நாடு தேர்தல் களம்

# தி. மு. கழகத்தினர் வெற்றி விழா நடத்த வேண்டாம்

## முதல் அமைச்சர் வேண்டுகோள்

( நமது சென்னை நிருபர் )

சென்னை, மார்ச். 8

தஞ்சை மாவட்டத்திலுள் தி.மு. கழகத்திற்கு பிரசாரம் செய்துவந்த தொண்டரான காளிமுத்து என்ற 18 வயது வாலிபர் நஞ்சூட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். இவர் வேதாரணியம் தொகுதியில் தி மு க வேட்பாளராக போட்டியிட்ட மீனாட்சி சுந்தரத்திற்கு ஆதரவாக பிரசாரம்செய்து வந்தார். இவரை சிண்டிகேட் காங்கிரஸார், வழிமறித்த தி மு கழகத்திற்கு பிரசாரம் செய்யாதே என்று பயமுறுத்தினார்களாம். இதற்கு அவர் மறுக்கவே, ஒரு கோஷ்டியினர் அவரைக் கடத்திச் சென்று விஷம் கொடுத்ததாக கூறப்படுகிறது. இது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் பொலிசார் ஒருவரை கைதுசெய்துள்ளார்.

மதுரை மாவட்டத்தில் எம். ஜி. ராமச்சந்திரன் சூறுவளி தேர்தல் பிரசாரம் செய்தார் அவரைப் பார்க்கச் சென்ற ஒருவர் கூட்ட நெரிசலில் சிக்கி காயமடைந்தார் எம் ஜி ஆர். அவரை ஆஸ்பத்திரியில் போய்பார்த்தார்.

கோவை மாவட்டத்தில் சுற்றுப்பிரயாணத்தைமுடித்துக் கொண்ட எம் ஜி ஆர். நேற்றுமுன்தினம் மதுரை மாவட்டத்திற்கு சென்றார். நேற்று முன்தினம் வைகை அணையில் பலத்த மழை பெய்துகொண்டிருந்தது மழையையும் பெருட்படுத்தாமல் மக்கள் எம் ஜி ஆரின் பேச்சைக் கேட்க காத்திருந்தார்கள். 150 இடங்களுக்கு மேல் தி மு கழகத்திற்கு கிடைக்கும் என்று எம் ஜி. ஆர். தெரிவித்தார்.

### சென்னையில் நடந்தது

சென்னையில் அரசாங்க பஸ் ஒன்றுக்கு தீவிர கம்யூனிஸ்டுகள் தீவைத்தார்கள். அவர்களை பொலிஸார் தேடி வருகின்றனர் அண்ணா நகர் அருகில் பஸ் சென்றுகொண்டிருந்த போது 5 பேர் பஸ்ஸை வழிமறித்தார்கள். அவர்கள் கத்தி பெற்ரோல் டின் ஆகியவை வைத்திருந்தார்கள். கத்தியைக் காட்டி கண்டக்டரையும், பிரயாணிகளையும், கீழே இறங்கும்படி கூறினார்கள். பிரயாணிகள் இறங்கிறதும், பெற்ரோலை ஊற்றி தீ வைத்தார்கள். உடனே அப்பகுதியில் உள்ளவர்கள் ஓடி வந்து தீயை அணைத்தார்கள்.

### முஸ்லிம்கள் கண்டனம்

துக்ளக் படம் முஸ்லிம்களின் மனதை புண்படுத்தும் விதத்தில் இருக்கிறது. அதை தடை செய்ய வேண்டும் என்று சென்னையில் நேற்று முஸ்லிம்கள் கண்டன ஊர்வலம் நடத்தினார்கள். ஆயிரம் விளக்குத் தொகுதியில் சுயேச்சையாக போட்டியிட்டு. போட்டியிலிருந்து விலகிக் கொண்ட சாவிகா என்பவர் தலைமையில் இந்த ஊர்வலம் நடைபெற்றது. சுமார் 100 முஸ்லிம் வாலிபர் அடங்கிய இந்த ஊர்வலத்தினர் துக்ளக் படம் திரையிடப்படும் தியேட்டருக்கு வந்தார்கள். அவர்கள் தியேட்டர் நிர்வாகியைச் சந்தித்து தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர்.

முகமது என்பது புனிதமான பெயர் அந்தப் பெயரால் முஸ்லிம்களை இண்டல் செய்கிறது இந்தப் படம். முஸ்லிம் அல்லாத ஒரு ஐயர், முஸ்லிம் வேடத்தில் வந்து மனதை துன்புறுத்துகிறார் என்று அவர்கள் தெரிவித்தனர். தியேட்டரில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது.

பார்க்டவுன் தொகுதியில் 5,000 ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெறுவேன் என்று தி. மு க வேட்பாளர் ஆசைத்தம்பி கூறினார் கோவையில் நடந்த கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது' கடந்த தேர்தலில் நான் எழும்பூர் தொகுதியில் போட்டியிட்டபோது ஆசைத்தம்பி வெற்றி பற்றுவிட்டால் சென்னை நகரில் காங்கிரஸுக்கு ஒரு இடம் கூடகிடைக்காது என்று காமராஜர் கூறினார் அதை நான் இப்போது நினைவுபடுத்துகிறேன்.

### 2,600 பேர் கைது

சென்னையில் இதுவரை 2600 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள் ஏற்கனவே 2000 பேர் கைதுசெய்யப்பட்டனர். நேற்று முன் தினம் கல்வீச்சு சம்பவம் சம்பந்தமாக 600 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் சென்னையில் இம் மாதம் 10-ம் 11-ம் தேதிகளில் ஓட்டுக்கள் எண்ணப்படவிருக்கின்றன. இத்தினங்களில் சென்னை நகரில் பொலிஸார் தடைஉத்தரவு போட்டுள்ளார்கள் முன் அனுமதியின்றி எவரும் ஊர்வலமோ பொதுக் கூட்டமோ நடத்தக்கூடாது

கோவை மாவட்டத்தில் தி. மு. க. தொண்டர் ஒருவரை தாக்கியதுசம்பந்தமாக பொலிஸார் சந்தேக நபர் ஐவரை தேடி வருகின்றனர் தாக்கப்பட்ட தொண்டரான பழனிசாமி தி மு க. வேட்பாளர் மாணிக்கவாசகத்தை ஆதரித்து பிரசாரம் செய்துவந்தார் சந்தேக நபர்கள் விவசாயசங்கத்தை சேர்ந்தவர்களாகும்.

தி மு. க. கூட்டணியினர் வெற்றிபெறும் இடங்களில் உடனடியாக வெற்றி ஊர்வலம் வெற்றி விழாக்கள் நடத்த வேண்டாம் என்று முதலமைச்சர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார். அந்த வேண்டுகோளில் அவர் மேலும் கூறியிருப்பதாவது: உடனடியாக வெற்றி ஊர்வலம் நடத்தவேண்டாம் [illegible] நாட்கள் கழித்து அதற்கான நிர்ணயிக்கப்படும் திகதிகளில் வெற்றி ஊர்வலம் நடத்துங்கள் இதுபோல மற்றக் கட்சித் தலைவர்களும் தங்கள் கட்சி உறுப்பினர்களுக்கு அறிவுரை வழங்குவார்கள் என்று நம்புகிறேன்.

பறங்கிமலைத் தொகுதியில் குத்திக் கொல்லப்பட்ட தி. மு. க. தொண்டர் வீட்டுக்கு நேற்று எம். ஜி ராமச்சந்திரன் சென்று துக்கம் விசாரித்தார். கொலையுண்ட தி. மு. க. தொண்டரின் மனைவியைப் பார்த்து எம். ஜி ஆர். கண்ணீர் விட்டு அழுதார். கொலையுண்டவரின் மனைவி எம். ஜி. ஆரின் காலில் விழுந்து கதறிக் கதறி அழுதார். உங்கள் மேல் உயிரையே வைத்திருந்தாரே. பாவிகள் அவரைக் குத்திக் கொன்றுவிட்டனரே இனி என்ன செய்வேன்'' என்று அப்பெண் அழுது புலம்பினார்

எம். ஜி. ஆர். அங்கிருந்து நேராக ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குச் சென்றார் அங்கு, குத்தப்பட்டு காயமடைந்திருந்தவர்களைப் பார்வையிட்டார்.

சேலத்தை மீண்டும் தி. மு. க. கைப்பற்றும் என்று முதலமைச்சர் கருணாநிதி கடலூரில் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் தெரிவித்தார், கடலூரில் நடந்த கூட்டத்தில் அவர் கடைசியாகத் தேர்தல் பிரசாரம் செய்தார்.

### ஒருவர்கூட ஓட்டுப்போடவில்லை

திருமயம் தொகுதியில் கும்பம்குடி கிராமத்தில் ஒரு வாக்காளர்கூட ஓட்டுப் போடச் செல்லவில்லை என்ற தகவல் இப்போது கிடைத்துள்ளது. கும்பங்குடியில் அமைக்கப்பட்டிருந்த ஓட்டுச்சாவடிக்குத்தான் 3 மைல்களுக்கு அப்பால் உள்ள கல்லக்குடியைச் சேர்ந்த வாக்காளர்களும் வந்து வாக்குப் போட வேண்டியிருந்தது. இதற்கு அவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கவே கல்லக்குடி வாசிகள் கோரிக்கைக்கு அனுதாபம் தெரிவித்து கும்பங்குடி மற்றும் அதைச்சேர்ந்த சிறுகிராமங்களில் வசிக்கும் வாக்காளர்களும் ஓட்டுப்போடச் செல்லவில்லை. மொத்தம் 1200 பேர் இவ்வாறு தேர்தலை பகிஷ்கரித்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

அமோக வெற்றிபெறுவோம் என்று எம். ஜி. ராமச்சந்திரன் மதுரையில் கடைசியாக நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார். இக்கூட்டத்தில் எம். ஜி. ஆர். மேலும் கூறியதாவது நடிகர் சோவின் படத்தை போட்டு ஓட்டுக்கேட்க வேண்டிய பரிதாப நிலை சிண்டிக்கேட் காங்கிரஸாருக்கு வந்துள்ளது அவர்களுக்காக நான் அனுதாபப் படுகிறேன்.

இக்கூட்டத்தில் சுமார் 2 லட்சம் மக்கள் கலந்து கொண்டார்கள்.

—...

## இளைஞர் அபிவிருத்தி இயக்கம்

உடுப்பிட்டி திங்கள் கரணவாய் - கரவெட்டி இளைஞர் அபிவிருத்தி இயக்க அங்குரார்ப்பணக் கூட்டம் திரு. செ. சுவாமி நாதர் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:-

தலைவர்: திரு. செ. சுவாமிநாதர் உபதலைவர்' டாக்டர் ஆ. திருச்சிற்றம்பலம் செயலாளர்; திரு. சுண. மகேஸ்வரன் உபசெயலாளர்கள்: திரு. எம். தில்லைநாதன் திரு. சி மகேஸ்வரன் பொருளாளர்; திரு செ சிவஞானசுந்தரம். பத்திராதிபர்; திரு ஜெ. ஜெயக்குமார்.

7 பேரடங்கிய நிர்வாக சபை யொன்றும் தெரிவு செப்பப்பட்டது.

## ஆந்திர கலாச்சார சங்கம்

கோட்டை, திங்கள்

இலங்கையிலுள்ள தெலுங்கு சமூகத்தினரை அங்கத்தவர்களாகக் கொண்ட ஒரு சங்கம் அவசியமானதாகும். இத்தகைய ஒரு சங்கமிருந்தால்தான் இங்குள்ள தெலுங்குமொழி பேசும் மக்களை அவர்களது முன்னேற்றத்திற்கான பல்வேறு துறைகளில் ஊக்குவிக்கமுடியும்.

இம் மாதம் 3-ந் திகதி கொழும்பில் நடைபெற்ற ஆந்திரா கலாச்சார சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத்தலைமை தாங்கிய திரு. ஏ. எம் ராஜு மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் இச்சங்கம் தெலுங்கு சமூகத்தவரது கலாச்சார சமூகவளர்ச்சிக்காகப் பாடுபடும் எனக் குறிப்பிட்டார்.

தெலுங்கு மொழியைத் தெலுங்கு வம்சாவழியில் [illegible] வும் மேற்படி சங்கம் தீர்மானித்துள்ளது.

## தொழில்நுட்ப மாணவர் பேரவை

வெள்ளவத்தை, திங்கள்

'யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரிக்கு மாணவர்களை இனிமேல் கல்லூரிகளிலிருந்தே நேரடியாகத் தெரிவு செய்யப்படல் வேண்டும். அரசாங்கம் கல்லூரிகளில் வர்த்தக பாடங்களைப் போதிக்குமேயானால் அந்தப் பாடங்களை க. பொ. த. சாதாரண தரத்தில் பயிலும் மாணவர்கள் தொடர்ந்தும் தொழில்நுட்பக் கல்லூரியில் அதனைப் பயில முடியும்' என்று கொழும்பில் நடைபெற்ற தொழில்நுட்ப மாணவர்கள் பேரவைக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய திரு எஸ். சிவபாதசுந்தரம் கூறினார்.

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் வணிகத் தராதரபத்திர வகுப்புகளையும் டிப்ளோமா பட்டப்படிப்பையும் தமிழில் உடனே ஆரம்பிக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## "தனிப்பிரிவு வேண்டும்"

வேலணை, திங்கள்

நயினாதீவு, அனலைதீவு எழுவைதீவு, மண்டைதீவு அல்லைப்பிட்டி என்பவற்றிற்குக தனிப்பிரிவு அபிவிருத்திச்சபைகளை நிறுவித்தருமாறு இப்பகுதிகளின் கிராமசபைகளும் பிறசங்கங்களும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றன இவைகளின் வேண்டுகோளின் படி தனிப்பிரிவு அபிவிருத்திச்சபைகளை நிறுவ உடனே நடவடிக்கை எடுக்கும்படி திரு. சா. பொ. இரத்தினம் எ. பி. கடிதமூலம் யாழ். அரசாங்கஅதிபரைக் கோரியுள்ளார்.

பிறப்பு, இறப்பு திருமண பதிவாளர்களை அல்லைப்பிட்டிக்கிராம சபைப் பகுதிக்கும் புங்குடுதீவு கிழக்குப் பகுதிக்கும் தனித்தனியே நியமிக்கும் படியும் அக்கடிதத்தில் அவர் கேட்டுள்ளார்.

... ...

## "இவர்களையும் ஆசிரியர்களாக நியமிககவும்"

பருத்தித்துறை, திங்கள்

வர்த்தகக்கல்விக்கு ஏற்பட்டுவரும் முக்கியத்துவம் காரணமாகவும் தமிழ்மாணவரும், முஸ்லீம் மாணவரும் பயிலும், தமிழ்ப்போதனாமொழிப் பாடசாலைகளில் தராதரப்பத்திரமற்றவர்களாகவும், வர்த்தகத்துறைக் கல்வியில் கல்வித்தகைமை பெற்றவர்களாகவும் இருக்கும் ஆசிரியரை உடனடியாக நியமிக்கவேண்டுமென வேண்டுகிறோம்'' என்று கோரும் மகஜர் ஒன்றை அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றம் அமைச்சர் திரு பதியுத்தீன் மகமூத்துக்கு அனுப்பிவைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
எம் ஜி. ஆர். - பத்மினி
நடித்த
**விக்கிரமாதித்தன்**

**நாகம்ஸ் சினிமா**
கன்ருகம்
தினசரி 6-30 9-30
போயா நாட்கள் 2-30
சுந்தரராஜன் - விஜயா
நடித்த
**நாணல்**

8வது வாரம்
**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
ஏ.வி.எம் ராஜன்-சாரதா
நடித்த
**துலாபாரம்**

MANOHARA
Jaffna
Daily 4 Shows
David Niven - Eli Wallach
in
THE BRAIN
A Thinking Thief's Movie
(Technicolor - Franscope)

கடைசி வாரம்
**வின்ஸர்**
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி - சோ
நடித்த
ஜெமினியின்
**விளையாட்டுப் பிள்ளை**

**ராணி**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேசன்
ஜெயலலிதா
நடித்த
**எங்கிருந்தோ வந்தாள்**

**ராஜா - யாழ்ப்பாணம்**
தினசரி 4 காட்சிகள்
★ ஜெய்சங்கர் ★ நிர்மலா
★ முத்துராமன் ★ லெட்சுமி
சுந்தரராஜன்—நாகேஷ் வி.கே. ராமசாமி
மற்றும்பலர் திறம்பட நடித்த
சிறந்த ஹாஸ்ய சித்திரம்
**வீட்டுக்கு வீடு**
(எஸ். பி. ஆர். பிலிம்ஸ் வெளியீடு)

8வது வாரம்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 4 காட்சிகள்

கெப்பிட்டல்
(கொழும்பு)



**சிவாஜி**
**காஞ்சனா**
எம். என். நம்பியார்
நாகேஷ்
முத்துராமன்
இன்னும் பலர் நடித்த



**சி வ ந் த ம ண்**

## சங்கம் அமைத்தனர்

யாழ்ப்பாணம் திங்

"55 வயதில் இளைப்பாறும் திட்டம் கல்வியிலாகாவில் உள்ளவர்களையே வெகுவாகப் பாதித்துள்ளது. இத்திட்டத்திஞல் ஆசிரியர்கள் மிகுந்த கஷ்டமடைந்துள்ளனர். குடும்பப் பொறுப்பு வாய்ந்த இவ்வயதில் இவர்கள் தமது குடும்ப வளர்ச்சிக்காக எண்ணிய இலட்சியங்களை இத்திட்டம் வெகுவாகப் பாதித்துள்ளது. 60 வயதுவரை சேவைசெய்யும் எண்ணத்துடன் வேலை தொடங்கிய ஆசிரியர்கள் இத்திட்டத்தால் இழந்த உரிமைகளைப் போராடிப் பெற வேண்டும். பலர்ஒன்று கூடிப் போராடிஞலே அதன் பலன் கிடைக்கும். எனவே 55 வயதில் இளைப்பாறும் ஆசிரியர்களுக்கென ஒரு சங்கம் இருக்க வேண்டியது இன்றியமையாதது"

இவ்வாறு வடஇலங்கை 55 வயதுத் திட்டத்தில் ஓய்வுபெறும் ஆசிரியர்சங்க அங்குரார்ப்பண வைபவத்துக்கு தலைமைவகித்துப் பேசிய இளைப்பாறிய அதிபர் திரு ஏ. மண்டலேசுவரன் கூறிஞர். சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் கூட்டம் நடைபெற்றது. 50 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர் பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சங்க அமைப்பாளருள் ஒருவரான இசைப்புலவர் சி. செல்லத்துரை, தென்னிலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மூவாயிரம் ஆசிரியர்களுக்கு மேற்பட்ட இது போன்ற சங்கம் ஒன்று இச்சங்க அங்குரார்ப்பணத்தைப் பாராட்டி எழுதி அனுப்பிய கடிதத்தை சபையில் வாசித்தார்.

பண்டிதர் எஸ். கே. தம்பையாவும் பேசிஞர்.

## மிளகாய்த் தோட்டக்காரருக்கு பரிசுகள்

கோட்டை, திங்கள்

சிறந்த மிளகாய்த் தோட்டங்களுக்குப் பரிசுகள் வழங்குவதென காணி விவசாய அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவா தீர்மானித்துள்ளார்.

ஆரம்ப நடவடிக்கையாக ஒவ்வொரு வீட்டுத்தோட்டமும் பதிவுசெய்யப்படவிருக்கிறது. இத்தோட்டக்காரர்களுக்கு தேவையெனில் நிதி உதவியும், மிளகாய் செய்கைக்குத்தேவையான பயிற்சியும் அளிக்க அமைச்சு தீர்மானித்துள்ளது.

விவசாய சேவைகள் இலாகாவைச் சேர்ந்த பரிசோதகர்கள் அடிக்கடி மேற்படி தோட்டங்களைச் சென்று பார்வையிடுவார்கள்.

இந்த நடவடிக்கைகளால் அடுத்தவருடங்களில் மிளகாய் இறக்குமதி குறைந்து நாட்டின் அன்னிய செலாவணியில் குறிப்பிட்ட ஒரு தொகை மீதப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மேசைப்பந்தாட்ட சாம்பியன்

மானிப்பாய், திங்கள்

யாழ்ப்பாணம் கிறிஸ்தவ வாலிபர் சங்கம் அண்மையில் நடாத்திய வருடாந்த மனையக விளையாட்டுப்போட்டியில் திரு. பி. டி. லோறன்ஸ் மூன்று பிரிவுகளாக நடைபெற்ற மேசைப்பந்தாட்டப் போட்டி ஒவ்வொன்றிலும் சாம்பியனகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இலங்கை மேசைப்பந்தாட்ட மூன்றுவது பிரிவைச் சேர்ந்த விளையாட்டுவீரரையும் தோற்கடித்துள்ள இவர் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழையமாணவராவர்.

பாட்மின்ரன், கரம் செஸ் முதலிய மனையக விளையாட்டுப்போட்டிகளில் முறையே திரு பொபின் ஏகாம்பரம், எஸ் டி குலநாதன், திரு சி எஸ் வீரசிங்கம் ஆகியோர் சாம்பியன்களாகி பரிசில்களைப் பெற்றனர். பதுளையைச் சேர்ந்த செஸ் சாம்பியனை திரு சுப்பிரமணியத்தை திரு எஸ் டி குலநாதன் தோற்கடித்துள்ளா

REGAL - Jaffna
Daily 3 shows
George Kennedy
in
GUNS OF THE MAGNIFICENT SEVEN
(Technicolor)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மிளகாய் பயிரிடுவதற்கேற்ற தோட்டம் ஐந்து ஏக்கர் துண்டுகளாகப் பிரித்து விற்கப்படும். படித்த வாலிபருக்கு ஏற்ற திட்டம். லான்ட் இன்வெஸ்ற்மென்ட்ஸ், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம், போன்: 7453 2879

புத்தூர் பிரதான வீதியில் ஏழு பரப்புக் காணியில் புதிய பெரிய வீடு, நல்ல தண்ணீர், மின்சாரம் உள. உயர்தர கல்லூரி, அரசினர் மருந்துச்சாலை, தபாற்கந்தோர் அண்மையில். விலையின் ஒரு பகுதிக்கு ஈடு ஏற்றுக்கொள்ளப்படலாம். லான்ட் இன்வெஸ்ற்மென்ட்ஸ், 6, பிரதான வீதி. யாழ்ப்பாணம். 2877

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள்ளும், நாவற்குழியிலும் வீடு கட்டுவதற்குரிய பல காணிகள் உள. லான்ட் இன்வெஸ்ற்மென்ட்ஸ், 6. பிரதான வீதி, யாழ்ப்பாணம், போன்: 7453 2878

ஒஸ்டின் A 40 சோமசெற் ஈ. வை. எண்ணூயிரம் தொடர் புதிய டயர், பட்டரி ஒரே சொந்தக்காரர் என்ஜின் சிறந்த நிலையிலுண்டு. பார்வையிடவும். 47, புதிய தெரு, கொட்டடி, யாழ்ப்பாணம். 2876

மானிப்பாய் மெமோறியல் கல்லூரி வீதியில், கல்லூரிக்கு அண்மையில் 8 1/2 பரப்புக்காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. வே. இரத்தினசபாபதி, பலாலிவீதி, திருநெல்வேலிவடக்கு. 2881

கட்டுவன் மயிலிட்டி றேட்டில் செபமாலை மாதா கோவிலுக்கு அருகில் 2 பரப்பு காணியும் கடைக்கட்டிடமும், வீடும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு வ. கதிரன் மயிலிட்டி வடக்கு. 2882

## மாவட்ட அபிவிருத்திச்சபைகள்

கோட்டை, திங்கள்

இலங்கையில் கிராமசபையுள்ள சகல பகுதிகளிலும் 500 மாவட்ட அபிவிருத்தி சபைகள் அமைக்கப்படுகின்றன. விவசாய, கைத்தொழில் கைப்பணி ஆகிய வேலைகளில் ஏற்படும் பிரச்னைகளை இச்சபைகள் தீர்த்து வைக்கும்

ஒவ்வொருசபைக்கும் அரசாங்கம் 200,000 ரூபா வழங்கவுள்ளது. இச்சபைகள் ஒவ்வொன்றும் தத்தம் பகுதியில் உள்ள 50 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும். இதனால் இவ்வருட இறுதியில் கிராமப்புறங்களில் உள்ள 25000 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 236 நம்பர் கடையில் நகை அடைவு பிடிப்பவர் ப. க. பரமநாதன் அவர்களிடம் 1-1-68 தொடக்கம் 31-7-69 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 17-3-71 புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படி கடையில்பிரசித்தஏலத்தில்விற்கப்படும். 2791

## அடைவு நகை ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் 222, காங்கேசன் துறை வீதி, திரு. கந்தையா பரமு அவர்களிடம் 1-4-67 தொடக்கம் 31-12-68 வரை வைத்த அடைவுநகைகளில் மீட்கப்படாதவை 23-3-71 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி தொடக்கம் அதேயிடத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்.
வண்ணூர் பண்ணை.
2791

## சுங்க ஏல விற்பனை

28-5-1954-ம் திகதியிடப்பட்டு இல. 10675 அரசாங்க வர்த்தமானியில் (பகுதி i தொகுதி ii) பிரசுரிக்கப்பட்ட சுங்க ஏல நிபந்தனைகளுக்கமைய கீழ்க்காணும் பொருட்கள் 1971-ம் ஆண்டு மார்ச் மாதம் 14-ம் திகதி காலை 10-30 மணிக்கு இவ்வலுவலகத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும் இத்திகதியில் விற்கப்படாத மிகுதிப் பொருட்கள் அடுத்தநாள் (15-ம் திகதி) காலை 10-30 மணிக்குத்தொடர்ந்து ஏலத்தில் விற்கப்படும்.

ஒப்பம்:
எஸ்.எம்.ஜே. சேனரத்ன,
யாழ் மாவட்ட சுங்க சேகரிப்பாளருக்காக.

சுங்க அலுவலகம்.
யாழ்ப்பாணம்.
8-3-71

1. கராம்பு 41 மூடை.
2. படகு வெளியிணைப்பு இயந்திரம் 2 (Out Board Motors).
3. பாய்கள் (இந்தியா).
4. வின்செஸ்டர் மின்சூள் (டோச் லைற்).
5. ஊற்றுப்பேனை, எளிய் பேனை வகைகள் (இந்தியா).
6. பிளாஸ்டிக் வளையல்கள் (இந்தியா).
7. செயற்கை ஆபரணங்கள்.
8. தலைமுடிகள்.
9. சீப்புகள்.
10. பிளாஸ்டிக் பூக்கள்.
11. 'சானியோ' துணி கழுவு இயந்திரம் '(Sanyo' Washing Machine Model 470 E 240 Volts Capacity 4 Lbs )
12. 'சான்சுயி' ரேப் றெகாடர் (Tape Recorder Model 3000, 4 Track Stereo With Tuner Amplifier)
13. கடலில் மூழ்கப்பட்ட வள்ளம்.
14. 'பொஸ்' மின்சார ஹாரன் (Bors Elect Horns).
15. மணிக்கடைச் சாமான்கள்.
16. சாதிக்காய் பூ 3 மூடை. 3208

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று நடக்கும் உலக குத்துச் சண்டை போட்டியில்

# கிளே வெற்றி பெறுவாரா?

## தோற்றவருக்கும் 25லட்சம் டாலர்!

நியூயார்க், மார்ச் 9 உலக அதிபாரக் குத்துச் சண்டைச் சாம்பியன் பட்டத்தை யார் தட்டிக் கொள்வார்கள்? உலகக் குத்துச்சண்டைப் பிரியர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் இந்தக் கேள்விக்கு இன்று பதில் கிடைத்துவிடும்!

உலககுத்துச்சண்டை சாம்பியனாக இருந்து அப்பட்டத்தைப் 'பறிகொடுத்த' முகமதலி என்ற காஸியஸ்கிளே சாம்பியன்பட்டத்தை மீண்டும் நிலைநாட்டிக்கொள்வாரா, அல்லது அவருடன் மோதும் மற்ெறாரு உலக குத்துச்சண்டை வீரரான ஜோபிரேஸியர் இப்பட்டத்தை தட்டிக்கொள்வாரா என்பது இன்று காலை இலங்கை நேரப்படி 9மணிக்கு ஆரம்பமாகும் போட்டி பதிலளிக்கும்.

நியுயார்க் நகரிலுள்ள மடிசன் சதுக்கத்தில் உலகமே பரபரப்போடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இம்மாபெரும் போட்டி நடைபெறவிருக்கிறது

அமெரிக்க அரசாங்கத்தின் கட்டாய ராணுவ சேவைக்குச்செல்ல மறுத்ததால் மூன்றரை வருட காலம் சிறைக்குள் தள்ளப்பட்டார் காஸியஸ் கிளே இதனால் 'உலக குத்துச்சண்டை சாம்பியன்' பட்டத்தையும் இழந்தார். நான்குமாதகாலத்துக்குமுன்பாக குத்துச்சண்டை அரங்குக்குள் நுழைந்த கிளே மின்னல்வேகத்தில் கால்களைப் பாவிக்கும் ஆற்றல் மிக்கவர்

இவருடன் மோதும் பிரேஸியரை கிளே தனக்கே உரிய பாணியில் மின்னல் வேகத்தில் கால்களைப் பாவிப்பதன் மூலம் களைப்படையச் செய்து பின்னர் அபாரக் குத்துக்களை உபயோகிப்பதன் மூலம் உலகச் சாம்பியன் பட்டத்தைத் தட்டிக்கொள்வார் என்று குத்துச்சண்டை ரசிகர்கள் நம்புகிறார்கள்.

அழகு காட்டும் உல்லாச மியாமிக் கடற்கரையில் கடைசியாக நேற்றிரவு 4 ரவுண்டுகள் பயிற்சி பெற்றார் கிளே.

இன்று நடக்கும் இந்தப் போட்டியில் யார் வெற்றி பெற்றாலும், இரு வீரர்களுக்கும் 25 லட்சம் டாலர் சுமார் [250 லட்சம் ரூபாய்] போட்டி முடிவில் வழங்கப் படும்.

### கலைவிழா

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம் மாநகரசபையினரின் பௌர்ணமி கலைவிழா இம்மாதம் 11-ம் திகதி மாலை திறந்தவெளி அரங்கில் நடைபெறும். அல்லைப்பிட்டி வாகீசர் சனசமூகநிலையத்தினரின்' அடையாள அட்டை என்னும் சமூக நாடகமும், யாழ் கமலா நாடகமன்றத்தினரின் 'வெள்ளிக்கிண்ணம்' என்னும் சமூக நாடகமும் மேடையேற்றப்படும்

### இன்றைய பலன்

மாசி மாதம் 25-ம் திகதி (9-3-71)

மேஷம்- நீண்டநாள் எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கலாம். வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு

ரிஷப - ஆணவப் போக்கினால் நண்பர்களைப் பகைத்துக்கொள்ளுவீர்கள், மற்றவர்களின் குறுக்கு வழித் தலையீடு ஆத்திரத்தை மூட்டலாம்.

மிதுனம்- துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும், சிறிய தலையிடிக்கு இடமுண்டு

கடகம்- அதிக சிந்தனை அமைதியைக் கெடுக்கும். புதிய கோணத்திலிருந்து தாக்குதல் உருவாகும்

சிம்மம்- மேலதிகாரிகளுடன் தொடர்புகொள்வதற்கு இன்று நல்ல நாள். இன்சனங்கள் மத்தியில் செல்வாக்கு வளரும்

கன்னி- உணர்ச்சிமயமான தினம் மனப்போராட்டங்கள் நடைபெறும். உடல் நலனும் பாதிக்கப்படலாம்

துலாம்- விளைபொருள் விருத்தியுடன் விருந்துக்கும் இடமுண்டு தாய் வழித் தனமும் தாராளமாகக் கிடைக்கும்.

விருச்சிகம்- மற்றவர்களின் இன்னல் கண்டு இரக்கம் காட்டுவீர்கள், தாராளமான குணத்தின் மூலம் தனமும் செலவாகும்

தனுசு- கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும், போகுவரத்து விடையத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

மகரம்- புதிய நண்பர்களுடன் பழகுவீர்கள், இன்று ஏற்படும் தொடர்புகள் எதிர்காலத்திற்குச் சிறந்த பயனை அளிக்கும்

கும்பம்- இறை வழிபாடு மேலிடும், இதயத்தில் அமைதியும் எற்படும். பிதா வழி மூலம் நல்ல செய்தியும் கிடைப்பதற்கு இடமுண்டு.

மீனம்- தரும காரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள் சுற்றுடலில் மதிப்பு உயரும். தெய்வத்தின் துணையுண்டு

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

இப் பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் மேற்கு [illegible] 63-ம் இலக்கத்திலுள்ள [illegible] அச்சகத்தில் 1971ம் [illegible] மார்ச் மாதம் 9-ந் [illegible] வெளியிடப்பட்டது.

## 3 வருட நன்னடத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு கொண்டுவந்தார்

இதைத் தொடர்ந்து நீதியரசர் எதிரியை 1000 ரூபா உறுதிப் பிணையில் 3 வருட நன்னடத்தையில் செல்ல அனுமதித்தார்.

ஒவ்வொரு மாதம் 1-ம் திகதியும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஆஜராக வேண்டும் என்றும். 3 வருடகாலத்திற்குள் ஏதாவது குற்றம்செய்தால் அக்குற்றத்திற்கும், இந்த வழக்கு குற்றத்திற்கும் சேர்த்து தண்டனையளிக்கப்படும் என நீதியரசர் எதிரியிடம் தெரிவித்தார்.

நீதியரசர் தீர்ப்பளிக்கையில் கூறியதாவது: இது ஒரு பாடமாக இருக்கட்டும் இனிமேல் வாழ்க்கையில் சீராக இருக்கவேண்டும். டாக்குத்தர்மார் சிகிச்சை செய்தபடியால் நீ தப்பிக் கொண்டது உன் நல்ல காலம்

அச்சுவேலியை சேர்ந்த தம்பிமுத்து கணேசமூர்த்தி தான் பிணைக்கு பொறுப்பாக நிற்பதற்கு கோர்ட்டில் சம்மதம் தெரிவித்தார்,

இவ்வழக்கில் வவுனியாவைச் சேர்ந்த வேப்பங்குளத்தில் 69-ம் ஆண்டு நவம்பர் 1-ம் தேதி கருப்பண்ணன் மனைவி முத்துலட்சுமியை (வயது 27) நஞ்சு பருக்கிகொலைசெய்ய முயற்சித்ததாகவும், நஞ்சருந்தி தற்கொலை செய்ய முயற்சித்தாகவும் முனியாண்டி நடராசா(வயது25) என்பவர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வகேட் ஆர் ஈ. தம்பிரத்தினம் புறக்டர் கே. குணரத்தினம், புறக்டர் கே. உலகநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் காங்கேயர் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் சந்திரசேகரா ஆஜரானார்.

அசைஸ் விசாரணை இம்மாதம் 12-ம் திகதி வரை ஒத்திபோடப்பட்டுள்ளது.

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 9—3—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீ. அல்லது 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்,

844 மீ. அல்லது 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

844 மீ. அல்லது 61 மீ.

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு. 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நாளைய சந்ததி.

இரவு 6-15 வாத்திய இசை, 6-30 நாட்டுப்பாடல்கள், 7-15 பாட்டு. 7-45 நேயர் விருப்பங்கள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 பாட்டு, 10-30 செய்தித் தொகுப்பு.

### இ. போ. ச.

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளார், இக்கொலை சம்பந்தமாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை திரு. ராகவன் முழுமூடியணிந்திருந்தார்களாம்.

### டிப்போ தரம்பிரித்தல்

ஒவ்வொரு இ. போ ச. டிப்போக்களையும் அவற்றின் வருவாய், பஸ் பழுதடைதல் போன்றவற்றுக்கமைய தரம் பிரிக்கப்படவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. டிப்போக்களைத் தரம் பிரிப்பதன் மூலம் இ. போ. ச. வில் நிலவும் ஊழல்களை ஒழித்து, திறமையாக இயங்க வைக்கமுடியுமென இ. போ ச. தலைவர் திரு அனில் முனசிங்கா கருதுகிறார்.

டிப்போக்களைத் தரம் பிரித்து, அவற்றுக்குப் புள்ளிகள் கொடுக்கவிருப்பதாக திரு. அனில் முனசிங்கா நேற்று தெரிவித்தார். மேலதிக வருவாய், சேவையில் ஈடுபடுகின்ற பஸ்கள் பழுதடைதல் போன்றவற்றைக்கொண்டு இத்தரம் பிரித்தல் இடம்பெறும்.

(சி பி எ)

### யாழ்ப்பாணத்தில் பரீட்சை ஆணையாளர்

யாழ்ப்பாணம், செவ். கல்வித் திணைக்கள பரீட்சை ஆணையாளர் திரு. சுமணசூரியா யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இம்மாதம் 14, 15, 16-ந் திகதிகளில் நடைபெறவிருக்கும் ஜி. சி. ஈ. பரீட்சை சம்பந்தமான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காகவே இவர் வந்துள்ளார். வினாத்தாள்கள் பொறுப்பாளர், பரீட்சைப் பொறுப்பாளர் ஆகியவர்களின் வீடுகளுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்துடன் ஏற்பாடு செய்துள்ளார்.

### பிரிவுபசாரம்

சுன்னாகம், செவ்வாய் சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாலயத்தில் உதவிஆசிரியராகவும், பல ஆண்டுகள் தலைமையாசிரியராகவும் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு. மா. குமாரசாமியின் சேவையைப்பாராட்டி நாளை மாலை மேற்படி பாடசாலை மண்டபத்தில் திரு. க. தம்பிரத்தினம் தலைமையில் பிரவுபசாரவிழா நடைபெறும்.

### ஜெர்மன் - இலங்கை வர்த்தக ஒப்பந்தம்

கோட்டை, திங்கள் இம்மாதம் 12-ம் திகதி இலங்கைக்கும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்குமிடையே கைச்சாத்திடப்படவிருக்கும் ஐந்து வருட வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் இலங்கை, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிடமிருந்து 2 கோடி ரூபா பெறுமதியான பொருட்களை வாங்கவுள்ளது இதே வேளையில் ஜெர்மனியும் 2 அரைக்கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுள்ள பொருட்களை இலங்கையிடமிருந்து பெற்றுக்கொள்ளும்.

## தனியார் கல்வி நிலையங்கள் மீது திடீர் சோதனை

கோட்டை, திங்கள் தனியார் கல்விநிலையங்களில் திடீர் சோதனைகளை விரைவில் கல்வி அமைச்சு நடத்தவிருக்கிறது. மாணவர்களை ஏமாற்றும் நோக்கத்துடன் சில கல்வி நிலையங்கள் இயங்கிவருவதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து இவ்வித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கு உண்மையான சேவை செய்பவற்றையும், சுயநலத்துக்காக மாணவர் நலனைக்கவனியாது இயங்கும் நிலையங்களையும் திடீர் சோதனைகளால் தரம் கண்டுகொள்ள முடியுமென அமைச்சு கருதுகிறது.

பிராந்திய கல்வி அதிபதிகளுக்கு இது சம்பந்தமான சுற்றறிக்கை விரைவில் அனுப்பிவைக்கப்படவிருப்பதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஜி. சி. ஈ. பரீட்சை எடுத்துவிட்டு பாடசாலையை விட்டுவெளியேறிய மாணவர்களே இந்நிலையங்களில் பெரிதும் பாதிக்கப்படுவதாகபல ஆசிரிய தொழிற்சங்கங்கள் கல்வி அமைச்சரிடம் புகார் செய்திருந்தனர்.

### விடுதிச்சாலைகள் கையேற்பு

கொழும்பு, திங்கள் தற்போது உள்ளூராட்சி மன்றங்களால் நடாத்தப்பட்டுவரும் சுமார் பத்து விடுதிச்சாலைகளை பொதுநிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தமது அமைச்சின் நேரடி நிர்வாகத்தின்கீழ் பொறுப்பேற்கவிருக்கிறார்

ஆனைவிறவு, மன்னார், கல்முனை ஆகிய இடங்களில் உள்ள விடுதிச்சாலைகள் உட்பட பத்துவிடுதிச்சாலைகளை அரசாங்கம் கையேற்கவிருக்கிறது. விடுதிச்சாலை அபிவிருத்தியில் எதுவித முன்னேற்றத்தையும் உள்ளூராட்சி மன்றங்களால் இதுவரை மேற்கொள்ளாததால் இவ்வித நடவடிக்கை எடுக்கப்படுகிறதாம்.

(சி. பி. ஏ)

### பஸ் கட்டும் நிலையத்துள் பஸ்!

யாழ்ப்பாணம், செவ் நேற்றுக் காலை மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த இ போ சபை பஸ் ஒன்று யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள பஸ்கட்டும் நிலையத்துக்குள் புகுந்துள்ளது.

இதன்விளைவாக சாரதி கண்டக்டர் உட்பட சில பிரயாணிகளுக்குக் காயமேற்பட்டுள்ளதென்றும் எவருக்கும் பலத்த காயமேற்படவில்லையென்றும் தெரிகிறது.

### மரண அறிவித்தல்

திருமதி வள்ளிப்பிள்ளை

5-3-71ல் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவி திருமதி வள்ளிப்பிள்ளை காலமானார். இவர் பொன்னம்பலம், சுப்பிரமணியம், வல்லிபுரம், முத்துத்தம்பி ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆறுமுகசாமி, டாக்டர் செல்லத்துரை, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மாமியாருமாவர். அன்னாரின் பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மல்லாகம் மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

2197 — ஆ. பாலசிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org